# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2301 - 2022 ඔක්තෝබර් මස 07 වැනි සිකුරාදා - 2022.10.07

*2301 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 274 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 274 |


***கவனிக்க.*-** (i) *சேர்பெறுமதி வரி (திருத்தும்) சட்டமூலம் 2022, செத்தெம்பர் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2022, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு - 09

## காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதி காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஆகிய. ஏ. ஏ. விதுர சம்பத் ஆகிய நான் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தம சனாதிபதி அவர்களால் 1986/08/08 ஆந்திகதி வழங்கப்பட்டுள்ள நுவ/பி/3261 ஆம் இலக்க அளிப்புபத்திரத்தின் உரிமையாளரான மாகஸ்தொட்ட கெமுனுபுர என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி சுபசிங்க பதிரணகே சோமாவதி என்பவருக்கு கையளிக்கப்பட்டு நுவரெலியா மாவட்ட பதிவாளர், அலுவலகத்தில் நுவ/18/410/87 ஆம் இலக்கத்தின் கீழ் 1987/05/04 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கபடவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 04.11.2022 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் – ஒய பலாத்த கோரளையிலுள்ள 535 ஏ மாகஸ்தொட்ட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாகஸ்தொட்ட என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நுவரெலியா நில அளவையாளர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு .............. ஆம் இலக்க வெளிக்களத் தாளில் .......... என்பவரால் பி. பி. ஏ. 1012 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் ................. என்பவரால் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் 67 ஆம் இலக்கக் காணித் துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ஏக்கர் 0.088 ரூட் ............. பேர்ச்................ விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித் துண்டு:

வடக்கு : பி. பி. ஏ. 1012 இல் துண்டு இலக்கம் 65;
கிழக்கு : பி. பி. ஏ. 1012 இல் துண்டு இலக்கம் 68;
தெற்கு : பி. பி. ஏ 1012 கெமுனுபுர தரிசுநிலம்;
மேற்கு : பி. பி. ஏ. 1012 இல் துண்டு இலக்கம் 44.

ஏ. ஏ. விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2022, மாச்சு 12.

10 - 57

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68872.
மாகாணக்காணி ஆணையாளரின் இல : NP/28/ 04/ 02/SLO/41/1803.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டம் வேலணை (தீவகம் தெற்கு) பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. ஜே/13 வேலணை வடகிழக்கு கிராமஅலுவலர் பிரிவைச் சேர்ந்த அராலித்துறை எனும் கிராமத்தில் அமைந்துள்ள பிரதேச செயலாளரினால் தாயாரிக்கப்பட்ட சுவடு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 09 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதுமான அரசகாணியை வர்த்தக நோக்கத்திற்காக (நண்டு வளர்ப்பிற்கு) குத்தகைக்கு தருமாறு கேட்டு ஓசன் அக்குவா பண்ணை விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : அரச காணி;
கிழக்கு : கடல் மற்றும் கரையோர ஒதுக்கு;
தெற்கு : கரையோர ஒதுக்கு;
மேற்கு : கடல்.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கு அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2022.06.30 தொடக்கம் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் வருடத்திற்கான காணியின் பிரதான விலைமதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000/-) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில், காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை. 2021 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000/-) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடகாலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப்பணத்தின் 20% கூட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) **தவணைப்பணம்**.- அறவிடப்படமாட்டாது

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளர்/ மாகாணக் காணி ஆணையாளர்;/ பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கத்திற்காக (நண்டு வளர்ப்பிற்கு) நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேசச் செயலாளர் மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2022.06.30 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை மற்றும் கைமாற்றம் மட்டும் அனுமதிக்கப்படும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. வி. ரீ. டி. அமரசிங்க,
உதவி காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.09.22.

10 - 103

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2022**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 07.10.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.09.2022 |
| | | வெள்ளி | 14.10.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.09.2022 |
| | | வெள்ளி | 21.10.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.10.2022 |
| | | வெள்ளி | 28.10.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.10.2022 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 04.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.10.2022 |
| | | வெள்ளி | 11.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.10.2022 |
| | | வெள்ளி | 18.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.11.2022 |
| | | வெள்ளி | 25.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.11.2022 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 02.12.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.11.2022 |
| | | வெள்ளி | 09.12.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.12.2022 |
| | | வெள்ளி | 16.12.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.12.2022 |
| | | வெள்ளி | 23.12.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.12.2022 |
| | | வெள்ளி | 30.12.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.12.2022 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.